**டிசம்பர் – 21**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் (Council of Scientific & Industrial Research - CSIR) மற்றும் பிரான்சின் தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையம் (National Centre for Scientific Research - CNRS) ஆகியவற்றிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
    - இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமானது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதாகும்.
- இந்தியக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல்படை ஆகியவை "அப்ஹாரன்" என்ற பெரிய அளவிலான கடத்தல் தடுப்புப் பயிற்சி ஒன்றை கொச்சி துறைமுகத்தில் நடத்தின.
    - இந்தியாவில் பெரிய அளவிலான கடத்தல் தடுப்புப் பயிற்சி நடத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.

# தேசியச் செய்திகள்

## சர்வதேச நிதிச் சேவை மைய ஆணைய மசோதா, 2019

- இந்த மசோதாவானது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் மக்களவையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இந்த மசோதாவானது இந்தியாவில் உள்ள சர்வதேச நிதிச் சேவை மையங்களில் (International Financial Services Centres - IFSCs) நிதிச்சேவை சந்தையை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் ஒரு ஆணையத்தை நிறுவுவதற்கு வழிவகை செய்கின்றது.
- இந்த மசோதாவானது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005ன் கீழ் அமைக்கப்பட்ட அனைத்து IFSCsகளுக்கும் பொருந்தும்.
- இந்த ஆணையத்திற்கு ஒன்பது உறுப்பினர்களை மத்திய அரசு நியமிக்க இருக்கின்றது.
- இந்த ஆணையத்தில் உள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். இந்த உறுப்பினர்களை மீண்டும் அப்பதவிக்கே மறுநியமனம் செய்யலாம்.
- இந்த மசோதாவின் படி, அந்தந்த நிதித் துறை ஒழுங்குமுறை ஆணையங்கள் (அதாவது இந்திய ரிசர்வ் வங்கி, இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம், இந்தியக் காப்பீட்டு ஒழுங்காற்று மற்றும் வளர்ச்சி முகமை மற்றும் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையம் போன்றவை) பயன்படுத்தக் கூடிய அனைத்து அதிகாரங்களும் இந்த ஆணையத்தினால் மட்டுமே செயல்படுத்தப்பட இருக்கின்றன.
- இந்தியாவில் முதலாவது IFSCs ஆனது குஜராத்தின் காந்திநகரில் உள்ள கிஃப்ட் நகரில் அமைக்கப் பட்டுள்ளது.

## பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா - மூன்றாவது கட்டம்

- மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் பிரதான் மந்திரி கிராம சதக் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்த திட்டத்தின் மூன்றாம் கட்டமானது 1,25,000 கி.மீ. தொலைவுள்ள சாலை

இணைப்புகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது கிராம வேளாண் சந்தைகளை இணைக்கும் கிராமப்புற சாலை இணைப்புகளை ஏற்படுத்துவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளது.

***பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா பற்றி***

- இந்தத் திட்டமானது 2000 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டில், 14வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் கீழ், இந்தத் திட்டமானது மத்திய மற்றும் மாநில அரசுகளினால் 60:40 என்ற விகிதத்தில் நிதியளிக்கப் படுகின்றது.
- வடகிழக்கு மாநிலங்களில் இந்த நிதியுதவி விகிதமானது 90:10 (மத்திய அரசு : மாநில அரசு) என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- சாலைகளின் பெரும்பகுதியை உருவாக்குவதற்கு இந்தத் திட்டமானது நெகிழிக் கழிவு மற்றும் வெப்பப் படுத்தப்படாத கலவை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.

## சரக்கு மற்றும் சேவைகள் வரி ஆணையம் - முதல்முறையாக வாக்களிப்பு செயல்முறை

- சரக்கு மற்றும் சேவைகள் வரி ஆணையக் கூட்டத்திற்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை தாங்கினார்.
- முதல்முறையாக, சரக்கு மற்றும் சேவைகள் வரி ஆணையமானது வாக்களிக்கும் செயல்முறையைப் பயன்படுத்தியது.
- இந்த ஆணையமானது 2020 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மாநில மற்றும் தனியார் லாட்டரிகள் மீது 28% சீரான வரி விகிதத்தை நிர்ணயிக்க முடிவு செய்துள்ளது.

## GeM சம்வாத்

- “GeM சம்வாத்” ஆனது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் செயலாளரும் GeMன் (அரசின் மின்னணு சந்தையிடல்) தலைவருமான அனுப் வாதவன் என்பவரால் புது தில்லியில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது உள்ளூர் விற்பனையாளர்களை ஒரே தளத்தில் கொண்டு வருவதற்காக தொடங்கப் பட்டுள்ளது.
- GeM சம்வாத் சந்தையானது இந்த அமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிகள் மற்றும் முன்னேற்றங்கள் ஆகியவற்றைச் செய்வதற்கு வேண்டிய கருத்துகளைப் பயனர்களிடமிருந்துப் பெற எதிர்பார்க்கின்றது.

***GeM பற்றி***

- GeM ஆனது 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 அன்று தொடங்கப் பட்டது.
- இது தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலமும் தகவல் தொடர்பற்ற, காகிதமற்ற, மற்றும் பணமில்லாத வகையில் கொள்முதல் செய்வதன் மூலமும் பொதுக் கொள்முதலின் தன்மையினை மாற்றியுள்ளது.




## AMRUT (அம்ருத்) திட்டம் – நீட்டிப்பு

- இந்தத் திட்டமானது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்திய அரசானது அதன் முதன்மைத் திட்டமான AMRUT (புத்துயிர்ப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் திட்டம்) திட்டத்திற்கான காலக்கெடுவை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது 2022 ஆம் ஆண்டு வரை நீட்டித்துள்ளது.

***AMRUT திட்டம் பற்றி***

- இந்தத் திட்டமானது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நகர்ப்புறங்களைப் புதுப்பிக்கும் நோக்கத்துடன் பிரதமர் மோடியால் 2015 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இந்தத் திட்டத்திற்கு முன்பு ஜவஹர்லால் நேரு தேசிய நகரப் புதுப்பித்தல் என்ற திட்டம் செயல்பாட்டில் இருந்தது.
- நீர் வழங்கல், கழிவுநீர் மேலாண்மை போன்ற முக்கியமான பகுதிகளில் இந்தத் திட்டமானது கவனம் செலுத்த இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது அறிவிக்கப்பட்ட நகராட்சிகளுடன் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட அனைத்து சிறு நகரங்களையும் பெரு நகரங்களையும் உள்ளடக்கிய 500 நகரங்களை உள்ளடக்கியுள்ளது.




## இந்தியா - அமெரிக்கா 2 + 2 உரையாடல்

- இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து வாஷிங்டனில் பாதுகாப்பு தொடர்பான ஒரு

உரையாடலை நடத்தின.

- இந்த இரு நாடுகளின் இரண்டாவது 2 + 2 உரையாடல் இதுவாகும்.
- இந்த இரு நாடுகளும் விண்வெளி ஆய்வு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்தியாவின் ஜல் சக்தித் துறை அமைச்சகம் மற்றும் அமெரிக்காவின் புவியியல் ஆய்வு மையம் ஆகியவற்றிற்கு இடையே நீர் வளங்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட இருக்கின்றது.
- முதலாவது 2 + 2 உரையாடலானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் புது தில்லியில் நடத்தப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## டொனால்ட் டிரம்ப் மீதான பதவி நீக்கத் தீர்மானம் – அமெரிக்க அவை

- அமெரிக்க அவையால் (மக்கள் பிரதிநிதித்துவச் சபை) குற்றம் சாட்டப்பட்டு, பதவி நீக்கத்திற்குப் பரிந்துரைக்கப்படும் மூன்றாவது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆவார்.
- 2020 தேர்தலுக்கு முன்னர் தனது அரசியல் போட்டியாளரை விசாரிக்க வெளிநாட்டு அரசாங்கத்தை அணுகியதற்காக இவர் மீது குற்றம் சாட்டப் பட்டது.
- தற்சமயம் செனட் (மேல்சபை) சபையில் இவர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். இவர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு அச்சபையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெறுவது அவசியமாகும்.
- இதுவரை இரண்டு அமெரிக்க அதிபர்கள் (பில் கிளிண்டன் & ஆண்ட்ரூ ஜான்சன்) மட்டுமே குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் செனட் சபையால் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மார்பகப் புற்று நோய்க்குச் சிகிச்சையளிக்கக் கூடிய முதலாவது ஒத்த மாதிரி கொண்ட உயிரி மருந்து


- உலக சுகாதார நிறுவனமானது World Health Organization – WHO) மார்பகப் புற்றுநோய்க்குச் சிகிச்சையளிப்பதற்காக தனது முதலாவது ஒத்த மாதிரி கொண்ட உயிரி மருந்தான “டிராஸ்டுஜுமாப்” என்பதனை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டில் WHOன் அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள பெண்களுக்காக விலையுயர்ந்த, உயிர் காக்கும் சிகிச்சையை மிகக் குறைந்த விலையில் வழங்க WHO உறுதி பூண்டுள்ளது.

## “பீபா” மற்றும் “சாந்தமாசா”

- சர்வதேச வானியல் ஒன்றியமானது (International Astronomical Union - IAU) செக்ஸ்டன்ஸ் விண்மீன் தொகுப்பில் ஒரு வெள்ளை - மஞ்சள் நட்சத்திரத்தை “பீபா” என்றும் அதன் கிரகத்தை “சாந்தமாசா” என்றும் பெயரிட்டுள்ளது.
- பை - மீசோன் என்ற ஒரு அணுவகத் துகளைக் கண்டுபிடித்த முன்னோடியான

இந்தியப் பெண் விஞ்ஞானி பிபா சவுத்ரியின் நினைவாக இந்த நட்சத்திரமானது பெயரிடப் பட்டுள்ளது.

- பீபா ஒரு பழமையான நட்சத்திரமாகும். இது 6.2 பில்லியன் ஆண்டுகள் பழமையானது. இதன் ஒரே கிரகம் சாந்தமாசா ஆகும்.
- இந்தக் கிரகத்தின் நிறையானது வியாழனை விட 1.5 மடங்கு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. இது மிகவும் வெப்பமான கிரகமாக இருக்கின்றது.
- சாந்தமாசா தனது நட்சத்திரத்தைச் சுற்றி சுமார் 2.1375 நாட்களில் தனது சுழற்சியை நிறைவு செய்துள்ளது.
- குறிப்பிடத்தக்க வகையில், இயற்பியல் துறையில் 2019 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசானது ஒரு வெளிக்கோள் கண்டுபிடிப்பிற்காக வழங்கப் பட்டுள்ளது.




***IAU பற்றி***

- இது பிரான்சில் உள்ள பாரீஸைத் தலைமையிடமாகக் கொண்டு 1919 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டுள்ளது.
- இது சூரிய மண்டலத்தில் உள்ள கிரகத்தின் அம்சங்களைப் பெயரிடுவதற்காக அமைக்கப் பட்ட ஒரு உலகளாவிய ஆணையமாகும்.

# மாநிலச் செய்திகள்

## திரிபுராவின் முதலாவது SEZ – சப்ரூம்

- திரிபுராவில் உள்ள சப்ரூம் நகரில் முதலாவது SEZஐ (சிறப்புப் பொருளாதார மண்டலம் - Special Economic Zone) அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த SEZ ஆனது வேளாண் சார்ந்த உணவு பதப்படுத்துதல், ரப்பர் சார்ந்த தொழில்கள் ஆகியவற்றில் முதன்மையாகக் கவனம் செலுத்த இருக்கின்றது.
- இந்த SEZஆனது திரிபுரா தொழில்துறை மேம்பாட்டுக் கழகத்தினால் உருவாக்கப்பட இருக்கின்றது.

- முதல் 5 ஆண்டுகளுக்கு வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 10AAன் கீழ் SEZ பிரிவுகளுக்கான ஏற்றுமதி வருமானத்தில் 100% வருமான வரி விலக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- SEZ ஆனது 12,000 திறன் சார்ந்த வேலைகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும் இது அமைய இருக்கும் இடமானது சிட்டகாங் துறைமுகத்திற்கு அருகில் இருப்பதால் அதிக முதலீடுகளை ஈர்க்க இருக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச கிரிக்கெட் ஆணையத்தின் வருடாந்திர விருதுகள் – 2019


- ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஆல்ரவுண்டரான எலிஸ் பெர்ரி என்பவர் சர்வதேச கிரிக்கெட் ஆணையத்தின் (International Cricket Council - ICC) இந்த ஆண்டின் மகளிர் கிரிக்கெட் வீரருக்கான ரேச்சல் ஹேஹோ - பிளின்ட் என்ற விருதை வென்றுள்ளார்.
- இவர் ICCயின் மகளிருக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டி வீரராகவும் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- பெர்ரி என்பவர் கடந்த மூன்று ஆண்டுகளில் 2வது முறையாக (2017ல் முதல்முறையாக) ரேச்சல் ஹேஹோ - பிளின்ட் என்ற விருதை வென்றுள்ளார்.
- ஆஸ்திரேலிய விக்கெட் கீப்பரான அலிஸா ஹீலி என்பவர் இந்த ஆண்டின் டி20 கிரிக்கெட் வீரராகத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- இந்த ஆண்டின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரராகத் தாய்லாந்தைச் சேர்ந்த சனிதா சுத்திருங் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- மெக் லான்னிங் என்பவர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மற்றும் டி20 ஆகிய இரண்டு பிரிவுகளிலும் அணித் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.



# இதரச் செய்திகள்

## இந்தியாவின் டிஜிட்டல் மாநிலங்கள் - அறிக்கை

- “இந்தியாவின் டிஜிட்டல் மாநிலங்கள் - ஒரு ஒப்பீட்டுப் பகுப்பாய்வு” என்ற அறிக்கையின் இரண்டாவது பதிப்பானது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனமான கோயஸ் ஏஜ் கன்சல்டிங் என்ற நிறுவனத்தினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் உள்ள தரவுகளின் படி, டிஜிட்டல் செயல்பாடுகளில் சத்தீஸ்கர் மாநிலம் முதலாவது மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- இந்த அறிக்கையில் சத்தீஸ்கர் மாநிலத்தைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, ஹரியானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முறையே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பிடித்துள்ளன.
- தற்பொழுது 5வது இடத்தைப் பிடித்துள்ள மத்தியப் பிரதேசம் 2017 ஆம் ஆண்டில் முதலாவது இடத்தைப் பிடித்திருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.
- இந்த அறிக்கையின் முதலாவது பதிப்பானது 2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப் பட்டது.




## “எக்ஸாம் வாரியர்ஸ்” புத்தகத்தின் பிரெய்லி பதிப்பு

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சரான தாவர்சந்த் கெஹ்லாட் “எக்ஸாம் வாரியர்ஸ்” புத்தகத்தின் பிரெய்லி பதிப்பை வெளியிட்டார்.
- இந்தப் புத்தகமானது பிரதமர் நரேந்திர மோடியினால் எழுதப் பட்டது.
- இந்தப் புத்தகத்தின் பிரெய்லிப் பதிப்பானது இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் கிடைக்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★